கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 51/2017

30.09.22

பெயர்- ராதாகிருஷ்ணன்

வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ., மற்றும் டி.கெச்.செக்.ஏ., படித்துள்ளேன். இவ்வழக்கு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்றும், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரிந்துகொண்டுதான் நான் பதில்உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 06.08.2006ல் இறந்தார். தாவா வழக்கானது முதல் முறையாக 17,03,2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. தாவா வழக்கில் இன்றைய தேதிவரையில் வழக்குச்சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகைப் பரிகாரம் எதுவும் எங்களால் கோரப்படவில்லை என்றால் சரிதான், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளோம். 20.11.1995ம் தேதியில் எனது தகப்பனார், 1ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தின் அசலை

நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் இரசீதுகள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட இரசீதுகள் என்றால் அதில் உள்ள முதல் இரசீது தாவாசொத்திற்கானது இல்லை, மற்ற மூன்று இரசீதுகள் பட்டா எண்.352 என சொல்லியுள்ளதால் அது தாவா சொத்திற்குரியதுதான்.

**(அந்த இரசீதுகளில் 1ம் இரசீதை வா.சா.1 மறுத்ததால் 2,3 மற்றும் 4 இரசீதுகள் மட்டும் பி.வா.சா.ஆ.1-ஆக (எண்ணம்-3) தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).**

4. 1402, 1408 மற்றும் 1409 பசலிகளுக்குரியவை பி.வா.சா.ஆ.1-ஆக குறியிடப்பட்ட இரசீதுகள் என்று சொன்னால் இல்லை, 1408 மற்றும் 1409 பசலிக்குரியவை மட்டும்தான். என்னிடம் காண்பிக்கப்படும் இரசீது 20.11.1995 தேதியிட்ட பவர் பத்திரத்தின் அடிப்படையில் எழுதப்பட்டதற்கான கிரைய இரசீது என்றால் இல்லை, மேற்கண்ட கிரைய இரசீது குறித்து 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் முதல்முறையாக 03.10.2017ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே குறிப்பாக சொல்லியுள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

5. எதிர்வழக்குரையில் கிரைய இரசீது பற்றி கூறியபின்புதான் மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், எனது தகப்பனாரால் தாவா சொத்தினைப் பொறுத்து எழுதிக்கொடுக்கப்பட்ட 20.11.1995ம் தேதியிட்ட பொது அதிகாரப் பத்திரத்தை ஒப்புக்கொள்கிறேன் என்று சொன்னால்

சரிதான். நான் பொதுஅதிகாரப்பத்திரத்தின் அசலை பார்த்தில்லை எனக் கூறியுள்ள நிலையில், அதனன் அடிப்படையில் ஏற்படுத்தபட்ட கிரைய இரசீதில் உள்ள கையெழுத்து எனது தகப்பனாரின் கையெழுத்து இல்லை எனச் சொல்வது, இந்தப் பிரதிவாதிகளை ஏமாற்ற நான் சொல்லும் அடிப்படையற்ற எதிர்வாதம் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் இன்றைய தேதிவரையிலும் எனது தகப்பனாரின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து மற்றும் கிரைய இரசீதில் உள்ள கையெழுத்து ஆகியவற்றை ஒப்பீடு செய்து அறிக்கைப் பெற நடவடிக்கை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய இரசீது, கிரைய சொத்தைப் பெறுத்து முழுத் தொகையையும் பெற்றுக்கொண்டு, 1ம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து எனது தகப்பனாரால் கையெழுத்து செய்யப்பட்ட ஆவணம் என்றும், அதனை நன்கு தெரிந்து கொண்டே நான் வழக்கிற்காக தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

7. 2006ல் இறந்த எனது தகப்பனாரின் சொத்தினைப் பொறுத்து 2017ல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 கிஸ்து இரசீதைத் தவிர வழக்குச் சொத்து குறித்து வேறு ஏதும் இரசீதுகள் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2

ஆவணம் எனது தகப்பனார் இறந்து 9 வருடங்களுக்குப் பிறகு 2015ல் எனது தகப்பனார் பெயரில் பெறப்பட்ட இரசீது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.2ல் செலுத்தியவரின் பெயரில் யார் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் செலுத்தியது நான்தான் பெயர் குறிப்பிடப்படவில்லை. எனது தகப்பனார் பவர் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்டதிலிருந்து 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் தாவா சொத்து இருந்துவந்தது என்று சொன்னால் இல்லை. தாவா சொத்தை 3 பிரதிவாதிக்கு விற்று, 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தபின்பு சொத்தானது 3,4 பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்று சொன்னால் தெரியாது.

9. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பே தாவா சொத்தின் பட்டா பிரதிவாதிகளின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றால் எனக்குத் தெரியாது. எனது வழக்கு பிராது சங்கதிகளின்படிக்கு 1,2 பிரதிவாதிகள் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் மோசடியானது (ill-legal) என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இன்றையத்தேதிவரை வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் இல்லா நிலையது என பிராதிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

10. இன்றைய தேதிவரையில் தாவா சொத்து பொறுத்து

எதிர்வழக்குரையில் சொத்தானது பிரதிவாதிகள் கைவசம் இருப்பதாக சொல்லப்பட்டபோதிலும், சுவாதீன மீட்புரிமைப் பரிகாரம் என்னால் கோரப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் பவர் கொடுத்த நபர் உயிருடன் உள்ளதாக சரத்து கண்டுள்ளதா என்றால் பவர் கொடுத்த நபர் உயிருடன் உள்ளதாக நேரடியாக இல்லை, வசிக்கும் என்று குறிப்பிட்டுள்ளதை வைத்து நான் அவர் உயிருடன் உள்ளதாக மறைமுகமாக சொல்லப்பட்டுள்ளதாக சொல்கிறேன்.

11. வா.சா.ஆ-7 ஆவணத்தில் உயிருடன் உள்ளதற்கான (Life Certificate) எதுவும் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படும் கிரையப் பத்திரங்களுடன் முதல்வர், உயிருடன் உள்ளதாக (Life Certificate) இணைக்கப்படவேண்டும் என்ற மாண்புமிகு.உச்சநீதிமன்ற தீர்ப்பு வா.சா.ஆ.7க்கு பின்பு வந்தது என்றால் சரிதான். அதில், அது கடந்த காலத்திற்கும் பொருந்தும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. மேற்கண்ட Life Certificate தாக்கல் செய்யவேண்டியது கடந்த காலத்திற்கும் பொருந்தும் என நான் தற்போது சொல்லியுள்ள சங்கதியை நான் எனது பிராதிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ, பதில்உரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஏற்பட்ட காலத்தில் கிரையப்பத்திரம் பதிவதற்கான சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுதான்

பதிவு செய்யப்பட்டது என்றும், எனவே அதனை ஆட்சேபிக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள வாசகமான பவர் பத்திரம் பெற்றவரின் சுவாதீனத்தில் வழக்கு சொத்து உள்ளது என்பதை இன்றைய தேதிவரையில் நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ( **பின்னர் சாட்சி தானாக முன்வந்து ஆட்சேபித்ததாக கூறினார்**) எனது பிராதிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ அல்லது பதில் உரையிலோ வா.சா.ஆ.7ல் சொல்லப்பட்டுள்ள சுவாதீனத்தை ஆட்சேபித்து ஏதேனும் குறிப்பிட்டு மறுத்து நேரடியாக ஏதேனும் சொல்லியுள்ளோமா என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ளதாக சொல்லி மறுத்துள்ளோம்.

14. வழக்கு சொத்து 1995 முதல் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்துவந்ததை நான் பிராதில், முதல் விசாரணை வாக்குமூலத்தில் எவ்விடத்திலும் மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.20 முதல்முறையாக இந்நீதிமன்றத்தில் முதல்விசாரணையோடு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.20 கிரைய ஆவணம் எப்படி எங்கள் கைவசம் வந்தது என்பதைக் காண்பிக்க நாங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணம் எங்கள் கைவசம் உள்ளது. வா.சா.ஆ-20 அசல் கிரைய ஆவணம் ரெட்டியபட்டி நிலவள வங்கியில் இருந்தது என்றால் சரிதான்.

15. ரெட்டியபட்டி நிலவள வங்கியில் கடன் பெற்றதனை மீட்கமுடியாமல் எனது தகப்பனார், 1,2 பிரதிவாதிகளிடம் பணம் பெற்று தாவா சொத்தினைப் பொறுத்து பவர் பத்திரம் மற்றும் கிரைய இரசீது எழுதிக்கொடுத்ததாக கிரைய இரசீதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறு. **(மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படாத நிலையில் அது குறித்து குறுக்குவிசாரணை செய்ய முடியாது என வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபித்த நிலையில், மேற்படி ஆவணம் எதிர்வழக்குரையிலேயே சொல்லப்பட்டுள்ளதாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

16. தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் தாவா சொத்தின் மதிப்பு என்ன என்றால் எனக்குத் தெரியாது. சொத்தின் மதிப்பு தெரியாது என நான் சொல்லியுள்ளதால் 2017ல் தாவா சொத்தின் மதிப்பு ரூ-25 லட்சம் என்று சொல்லப்பட்டால் அதை நான் மறுக்கமுடியாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குச் சொத்தின் மதிப்பு எனக்குத் தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

17. எனது தகப்பனார் இறந்ததிலிருந்து, வழக்கு தாக்கல் செய்த காலம் வரையிலும் தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்ததைக் காண்பிப்பதற்கு வா.சா.ஆ.2 கிஸ்து இரசீது தவிர்த்து

வேறு ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தைப் பொறுத்து நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்ற வில்லங்கச் சான்றிதழ் என் கைவசம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 இணையதள வில்லங்கச் சான்றிதழ் நகல் என்று சொன்னால் சரிதான்.

18. என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ஆவணத்தில் எனது தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் பதிவு காண்பிக்கப்படவில்லை என்றாலும், அதில் எத்தனைப் பதிவுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு வாய்ப்பு கொடுத்தபின்பும், அதில் 2 பதிவுகள் காண்பிக்கப்பட்டுள்ளதாக திரும்பத் திரும்ப கூறினார். வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் பதிவு செய்ய Life certificate தேவையில்லை என்று சொன்னால் தவறாகும்.

19. வழக்குச் சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அருப்புக்கோட்டை வட்டம், திருமலைபுரம் கிராமத்தில் உள்ளது. இவ்வழக்கு 1,2 பிரதிவாதிகள் எந்த ஊரில் வசிக்கிறார்கள் என்றால் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பெருநாளி கிராமத்தில் வசிக்கிறார்கள். வழக்கு சொத்துள்ள இடத்திற்கும், பெருநாளி கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கி.மீ. இருக்கலாம்.

20. 1,2 பிரதிவாதிகளுக்கு, எனது தகப்பனார் உறவினர் இல்லை என்றாலும், அவர்கள் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றாலும் சரிதான். வழக்குச் சொத்தினைத் தவிர்த்து பல சொத்துக்களும் எனது தகப்பனார் பெயரில் இருந்தது. அதை தற்போது விற்றுவிட்டோமா என்றால் இல்லை, எனது பெயரில் உள்ளது. (பின்னர் சாட்சி தனது பெயரிலும், தனது அண்ணன் பெயரிலும் இருந்ததாக கூறினார்).

21. அவ்வாறான பட்டா பெயர் மாற்றம் என்பது 1 முதல் 5 வாதிகளான எங்களுக்குள் ஏற்பட்ட பாகத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரம் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தில் வழக்குச் சொத்து சேரவில்லை என்றால் சரிதான். பாகமானது எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 1980ல் ஏற்பட்டது.

22. வழக்கு சொத்துப் பொறுத்த கிரையம் 1968ல் வா.சா.ஆ.20ன் மூலம் சீனிவாசன் பெயருக்கு வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் இறந்தது தெரியாது என 1,2 பிரதிவாதிகளால் குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், எனது தகப்பனார் இறந்த விபரம் 1,2 பிரதிவாதிகளுக்குத் தெரியும் என்று நான் பிராதிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு

நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், சொல்லியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

23. நான் வழக்குச் சொத்துக் குறித்து சுவாதீன மீட்புரிமைப்பரிகாரமும், விளம்புகைப் பரிகாரமும் கோராமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்து, சட்ட காலத்திற்குள் தாவா வழக்கினை நான் தாக்கல் செய்யாததால் வழக்கானது காலவறையரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

24. வழக்குச் சொத்தானது 1995 முதல் 1,2 பிரதிவாதிகள் அனுபவத்திலும், அதற்கு பின்னிட்டு 3, 4 பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றும் 1995ற்கு பின்னிட்டு தற்போதுவரையில் எங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து தாக்கல் செய்யும் காலத்தில் வழக்குச் சொத்தின் மதிப்பு கூடுதலாக இருந்தது என்றும், அது சமூக நீதிமன்ற பணவரையறைக்குள் வராதநிலையில் நாங்கள் அதனை மறைத்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

25. அதன் அடிப்படையில் தாவா வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 20,11,1995ம் தேதியிட்ட கிரைய இரசீது எனது

தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட இரசீதுதான் என்றும், அதனை நன்கு தெரிந்துகொண்டே அதில் உள்ள கையெழுத்து எனது தகப்பனாரின் கையெழுத்து இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கானது, சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட காலத்திலேயே விளம்புகைப்பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எவ்வாறு நிலைநிற்கத்தக்கது என குறிப்பிட்டு திருப்பப்பட்ட பின்பும், அதனை நிவர்த்தி செய்யாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.6 ஆவணமான வில்லங்கச் சான்றிதழ் ஆவணமானது வழக்கிற்காக, வழக்கிற்கு பின்னிட்டு தரவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம் என்றும், வழக்கின் பிரதிவாதிகள் அனுபவம் தெரிந்து கொண்டே மேற்படி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாவா வழக்கில் கோரியுள்ள எந்தப் பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**